முருகப்பெருமான் துணை

உலகம் முழுதும் உள்ள அகத்தியர் சன்மார்க்க சங்க தொண்டர்கள் மீது அளவிலாது அன்பு கொண்டு முருகப்பெருமான் அருளியதே இந்த அருட்சுவடி.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1108

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.10.2022, செவ்வாய்கிழமை

1. வரம்தரும் ஞான தேசிகனே
   வள்ளலாய் வாழும் அரங்கனே
   திறம்கொண்ட தொண்டர் படைகளை
   தேசமெங்கும் நிறுவி உலகமாற்றம் செய்ய
2. செய்யவே அவதாரம் புரிந்த
   சிவராஜயோகியே அரங்கனே
   ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 24 ம் நாள் 11.10.2022, செவ்வாய்கிழமை)
3. மெய்ஞான உலகம் ஆக்கிட கலியுகத்தில்
   மேலான என் அவதாரம் புரிந்த
   அரங்கனே ஐயமற உன்வழி வருபவர் மூலமே
   ஆறுமுகன் யான் அகிலத்தை மாற்றி அற்புதம் நடத்துவேன்
4. நடத்தவே ஞான ஆட்சிக்காலம் ஞானதேசிகன் உன் தொண்டர்களைக் கொண்டு
   ஞான யுகமாக மாற்றி அற்புதம் நிகழ்த்துவேன்
   வகைபட அன்னதனால் அரங்கன் வழி வரும் அன்பர்களுக்கு
   வையகத்தில் வடிவேலன் என் ஆசியும் அருளும் பரிபூரணமாய் உண்டு
5. சலனமற அரங்கன் தீட்சை பெறும் மக்களுக்கு
   சடாட்சர பலம் பரிபூரணமாய் உண்டு உண்டு
   பலமான அரங்கன் தர்மத்தை
   பழுதின்றி கடைபிடிக்க அன்பர்கட்கு வளமான வாழ்வும் வடிவேலன் என்
6. அருளும் தயவும் பரிபூரணமாய் கண்டு
   அரங்கன் வழி வரும் மக்களெல்லாம்
   பாருலகில் ஞானிகளாக இனி
   பிறவாத பெரும்பேற்றை அடைந்து சிறக்க நேரும்
   
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–